DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 395/2023

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | லட்சுமணசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | லட்சுமணன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 17/02/2025

**(1,2,4,5 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் அம்பிளிக்கை கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை மற்றும் டிராக்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். 21.08.2016 ஆம் தேதி நான் சம்பவம் தொடர்பாக சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். 23.08.2016 ஆம் தேதி எனக்கு நான் கொடுத்த புகாருக்கு சி.எஸ்.ஆர். மனு ரசீது கொடுத்தார்கள். 10.12.2016 ஆம் தேதி எனது புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். நானும், 2 வது எதிரி ராஜேஸ்வரி என்பவரும் மூன்று வருடங்களாக காதலித்து வந்தோம். என்னை திருமணம் செய்து கொள்வதாக 2 வது எதிரி ராஜேஸ்வரி நம்பிக்கை அளித்தார். அவர் மேல் இருந்த நம்பிக்கையில் அவர் திருமணம் பதிவு செய்து கொள்வோம் என்று கூறியதன் பேரில் அவருக்கு 1.50 லட்சம் ரூபாய் பணம் அவர் கேட்டதற்கு இணங்க கொடுத்தேன். பின்பு பேங்க் மூலமாக ஒரு லட்சத்தி அறுபத்தி ஓராயிரம் ரூபாய் அனுப்பியுள்ளேன். ஹாஸ்டல் மாறுவதற்காக 45,000 ரூபாய் கொடுத்துள்ளேன். மொத்தம் மூன்று லட்சத்தி அறுபதாயிரம் ரூபாய் ராஜேஸ்வரிக்கு கொடுத்தேன். மேலும், துணிகள், பொருட்கள் வாங்கிக்கொடுத்து நான் கூறிய தொகையை விட அதிகமாகவே அவருக்கு செலவு செய்து உள்ளேன். ராஜேஸ்வரி என்னை திருமணம் செய்து கொள்ளாமல் என்னை ஏமாற்றிவிட்டார். 08.09.2016 ஆம் தேதி ராஜேஸ்வரிக்கு வேறொரு நபருடன் திருமணம் என்று தெரிந்து அவர்களது வீட்டிற்கு சென்று கேட்டேன். என்னை ராஜேஸ்வரியின் அப்பா மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து தகாத வார்த்தைகளால் பேசி மிகவும் மோசமான வார்த்தைகளால் பேசினார்கள். எனக்கு மனஉலைச்சளாகி நான் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு ஆளாகிவிட்டேன். எனது அம்மா சந்திரா, எனது மாமா

பாலசுப்பிரமணிக்கு தகவல் சொன்னார். மாமா பாலசுப்பிரமணி வந்து எனக்கு அறிவுரை கூறினார். மாமா பாலசுப்பிரமணி மற்றும் எனது பெரியப்பா வேலுச்சாமி, பெரியம்மா சரோஜினி அனைவரும் என்னை அழைத்து கொண்டு ராஜேஸ்வரியின் வீட்டிற்கு சென்றோம். அங்கு அவர்களிடம் நாங்கள் கொடுத்த பணத்தை மட்டும் கொடுக்கும்படியும் ராஜேஸ்வரியிடமிருந்து விலகி கொள்கிறேன் என்றும் பேசினோம். ஆனால் ராஜேஸ்வரி மற்றும் அவரது குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து தகாத வார்த்தைகளால் பேசினார்கள். நான் அவர்களிடம் ராஜேஸ்வரிக்கு ஹாஸ்டல் மாறுவதற்காக அவரது ஹாஸ்டல் விண்ணப்பத்தில் கார்டியனாக கையொப்பம் செய்தேன் என்றும், ராஜேஸ்வரிக்கு வங்கி மூலம் அனுப்பி தொகைகளுக்கான பேங்க் ஸ்டேட்மெண்ட்டை காண்பித்து பணம் தருமாறு கேட்டேன். அவர்கள் நான் காட்டிய எந்த ஆவணத்தையும் பொருட்படுத்தவில்லை. எனவே நான் காவல் நிலையத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக புகார் அளித்தேன். ஆஜர் எதிரிகளில் ராஜேஸ்வரியின் அப்பா மட்டும் இன்று ஆஜர் இல்லை. மற்ற நபர்கள் ஆஜராகி உள்ளார்கள் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அதுராஷ்ரமம் Working woman hostal Application for admission படிவத்தில் ராஜேஸ்வரியை சேர்ப்பதற்காக நான் கார்டியனாக கையொப்பம் செய்த படிவம் ஆகும். (அதுராஷ்ரமம் Working woman hostal Application for admission படிவத்தில் ராஜேஸ்வரியை சேர்ப்பதற்காக நான் கார்டியனாக கையொப்பம் செய்த படிவத்தின் உண்மை நகல் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் புகைப்படம் எதுவும் இல்லாததால் எதிரிகள் தரப்பில் ஆட்பேசபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்பேனைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). நானும், ராஜேஸ்வரியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் எனது மெமரிக்கார்டில் உள்ளது.

(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN
Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.02.17 18:31:00 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 17/02/2025